World Telecommunication
& Information Society Day
17 May 2026

# Digital lifelines

*Strengthening resilience in a connected world*





அநுர குமார திசாநாயக்க
ஜனாதிபதி
இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு

## அதிமேதகு ஜனாதிபதி அவர்களின் செய்தி

2026ஆம் ஆண்டு உலகத் தொலைத்தொடர்பு மற்றும் தகவல் சமூக தினத்தையும் (WTISD) சர்வதேச தொலைத்தொடர்பு ஒன்றியத்தின் (ITU) 161ஆவது ஆண்டு விழாவையும் இலங்கையானது உலகத்துடன் இணைந்து கொண்டாடும் இவ்வேளையில், இந்தச் செய்தியைப் பகிர்வதில் நான் பெரு மகிழ்ச்சியடைகின்றேன். இணைக்கப்பட்ட உலகில் மீள்திறனை வலுப்படுத்த டிஜிட்டல் உயிர்நாடிகள் என்ற இந்த ஆண்டின் கருப்பொருளானது, வலுவான டிஜிட்டல் உட்கட்டமைப்பின் முக்கிய பங்கை எடுத்துக் காட்டுகின்றது. இது உலகளாவிய அர்த்தமுள்ள இணைப்பை ஆதரிப்பதோடு, மக்கள், சமூகங்கள் மற்றும் பொருளாதாரம் போன்ற எல்லா சூழ்நிலைகளிலும் இணைந்திருப்பதை உறுதி செய்யவும் உதவுகின்றது.

இன்றைய உலகில், டிஜிட்டல் வலையமைப்புகளும் சேவைகளும் அன்றாட வாழ்க்கைக்கு இன்றியமையாதவை. தரைவழி வலையமைப்புகள், கடல்அடி கேபிள்கள், செயற்கைக்கோள் அமைப்புகள், தரவு மையங்கள் மற்றும் டிஜிட்டல் தளங்கள் ஆகியவை சுகாதாரம், கல்வி, நிதி, போக்குவரத்து, பொது நிர்வாகம் மற்றும் அனர்த்த மீட்பு உள்ளிட்ட பல துறைகளில் முக்கிய சேவைகளுக்கு உதவுகிறது. இந்த டிஜிட்டல் இணைப்பின் எந்தவொரு பகுதியிலும் ஏற்படும் இடையூறுகள், பொருளாதார மற்றும் சமூக செயற்பாடுகளில் பாரிய விளைவுகளை ஏற்படுத்தலாம். இயற்கை அனர்த்தங்கள், தீவிர காலநிலை நிகழ்வுகள், இணையவழி அச்சுறுத்தல்கள் மற்றும் தொழில்நுட்பக் கோளாறுகள் ஆகியவை பொதுப் பாதுகாப்பு, அன்றாட வாழ்க்கை மற்றும் பொருளாதார ஸ்திரத்தன்மையைப் பாதிக்கக்கூடும் என்பதால் டிஜிட்டல் மீள்திறன் தேசிய மற்றும் உலகளாவிய மட்டங்களில் ஒரு முன்னுரிமையாக மாறியுள்ளது.

2030ஆம் ஆண்டுக்கான டிஜிட்டல் பொருளாதார மூலோபாயத்திற்கு இணங்க, இலங்கை தனது பரந்த டிஜிட்டல் பரிமாற்றப் பயணத்தின் ஒரு முக்கிய அங்கமாக டிஜிட்டல் மீள்திறனை கருதுகின்றது. ஒரு நாடாக அனைவரையும் உள்ளடக்கிய மற்றும் உலகளாவிய ஒருங்கிணைந்த டிஜிட்டல் எதிர்காலத்தை நோக்கி நகரும் போது, நம்பகரமான டிஜிட்டல் உட்கட்டமைப்பு வசதிகள், தகவல் தொடர்பு சேவைகளின் தொடர்ச்சி மற்றும் இணையப் பாதுகாப்பு ஆகியவற்றிற்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்படுகின்றது. அவசர நிலைமைகளில் டிஜிட்டல் கட்டமைப்புகளை தொடர்ந்து செயற்படுத்தல், அதனை மீண்டும் இயல்பு நிலைக்கு மீட்டெடுத்தல், பொது மக்களுக்குத் தொடர்ந்து திறம்பட சேவைகளை வழங்கு நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளது. இந்தச் சூழலில், அனர்த்தங்களின்போது தகவல் தொடர்பு வலையமைப்பைத் தொடர்ந்து பேணுவதற்கும், அவசர நிலைமையில் தகவல் கட்டமைப்பை வலுப்படுத்துவதற்கு மேற்கொள்ளப்படும் முயற்சிகள் இந்த சவாலுக்கு இலங்கையின் நடைமுறைச் சாத்தியமான பதிவை பிரதிபலிக்கின்றன. மக்களுக்கு நம்பகரமான இணையவழி பிரவேசங்களை வழங்கல், தேவையான கருவிகள் மற்றும் திறன்களுடன் அவசியமான டிஜிட்டல் சேவைகளுக்கு இணைப்பை வழங்கல் ஒரு நாட்டின் தேசிய அபிவிருத்தி, பொதுமக்கள் பாதுகாப்பு, பொருளாதார நிலைத்தன்மை மற்றும் சமூக நல்வாழ்வு ஆகியவற்றிற்கு இன்றியமையாதவை.

இந்த முக்கிய தருணத்தில், சர்வதேச தொலைத்தொடர்பு ஒன்றியத்துடனான இலங்கையின் தொடர்ச்சியான கூட்டாண்மையையும், 2026ஆம் ஆண்டின் உலகத் தொலைத்தொடர்பு மற்றும் தகவல் சமூக தினத்தின் கருப்பொருளின் நோக்கங்களுக்காக நமது ஆதரவையும் நான் மீண்டும் உறுதிப்படுத்துகின்றேன். எமது மக்களுடைய நலனுக்காகவும், இலங்கை மீள்திறன் கொண்ட டிஜிட்டல் உயிர்நாடிகளைத் தொடர்ந்தும் மேம்படுத்தும்.

எமது மக்களின் நலனுக்காக நிலையான, பாதுகாப்பான மற்றும் அனைத்து சமூகங்களும் டிஜிட்டல் சேவைகளை அணுகக்கூடிய டிஜிட்டல் வேலைத்திட்டத்தை மேலும் முன்னோக்கி கொண்டு செல்வதில் நாம் தொடர்ச்சியாக அர்ப்பணிப்புடன் உள்ளோம்.



கலாநிதி ஹரிணி அமரசூரிய
பிரதமர்,
இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு

## பிரதமர் அவர்களின் செய்தி

மே மாதம் 17ஆம் திகதி அனுஷ்டிக்கப்படும் உலகத் தொலைத்தொடர்பு மற்றும் தகவல் சமூக தினத்தை (WTISD) முன்னிட்டு வாழ்த்துச் செய்தியொன்றை வழங்குவதில் நான் மகிழ்ச்சியடைகின்றேன்.

"டிஜிட்டல் இணைப்புகள் வழியாக ஒன்றிணைந்த வலையமைப்பு உலகில் நிலைத்தன்மையைப் பலப்படுத்துதல்" என்பது இவ்வாண்டின் எண்ணக்கருவாக அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த எண்ணக்கருவின் மூலம், நவீன வாழ்க்கையில் பெருமளவில் தங்கியிருக்கும் அத்தியாவசிய சேவைகள் மற்றும் தகவல் தொடர்புக்கு ஆதரவளிக்கும் வலுவானதும் நம்பகமானதுமான டிஜிட்டல் உட்கட்டமைப்பின் முக்கியத்துவம் கவனத்திற்குக் கொண்டுவரப்படுகின்றது.

டிஜிட்டல் தொழில்நுட்பமானது வெறுமனே ஒரு தகவல் தொடர்பு கருவியாக மட்டுமன்றி, ஊழலற்ற, வினைத்திறன் மிக்க அரச நிர்வாகம் மற்றும் காத்திரமான பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கான முக்கிய ஊடகமாக அமைய வேண்டும் என்பது, "வளமான நாடு - அழகான வாழ்க்கை" எனும் எமது கொள்கை அறிக்கையில் உள்வாங்கப்பட்டுள்ள முக்கிய இலக்குகளில் ஒன்றாகும்.

நாடு முழுவதிலும் உள்ள பாடசாலைகளுக்கு பைபர் ஒப்டிக் இணைய இணைப்பு மற்றும் டிஜிட்டல் கற்றல் வசதிகளை வழங்குவதன் மூலம், அனைத்துப் பாடசாலைகளுக்கும் சம வாய்ப்புகளைத் தோற்றுவிக்கும் நோக்கில் அரச பாடசாலைகளை ஒரு வலையமைப்பிற்குள் கொண்டுவரும் திட்டத்தை, இதற்கு ஒரு முக்கியமான முன்நகர்வாகக் குறிப்பிடலாம்.

சர்வதேச தொலைத்தொடர்பு ஒன்றியம் மற்றும் சம்பந்தப்பட்ட பங்காளர்களின் ஒத்துழைப்புடன் டிஜிட்டல் உட்கட்டமைப்பு மற்றும் சேவைகளின் நிலைத்தன்மையைப் பேணும் அதேவேளை, தேசிய முன்னேற்றத்திற்கு ஆரோக்கியமான பங்களிப்பை வழங்கும் வகையில் இலங்கையின் டிஜிட்டல் அபிவிருத்தி தொடர்ச்சியாக முன்னேற வேண்டியுள்ளது.

அதற்குத் தேவையான வலிமையும் தைரியமும் கிடைக்கப் பெற வேண்டும் என இந்த உலகத் தொலைத்தொடர்பு மற்றும் தகவல் சமூக தினத்தில் நான் பிரார்த்திக்கின்றேன்.

## டிஜிட்டல் பொருளாதார பிரதி அமைச்சர் அவர்களின் செய்தி



எரங்க வீரரத்ன
டிஜிட்டல் பொருளாதார
பிரதி அமைச்சர்

2026ஆம் ஆண்டு உலகத் தொலைத்தொடர்பு மற்றும் தகவல் சமூக தினத்தை (WTISD) நாம் கொண்டாடும் இவ்வேளையில், "இணைக்கப்பட்ட உலகில் மீள்திறனை வலுப்படுத்த டிஜிட்டல் உயிர்நாடிகள்" என்ற இந்த ஆண்டின் கருப்பொருளின் முக்கியத்துவத்தை முன்வைப்பதில் நான் பெரு மகிழ்ச்சியடைகின்றேன். டிஜிட்டல் பொருளாதார அமைச்சில், டிஜிட்டல் யுகத்தில் எந்தவொரு தனிநபரும் பின்தங்கி விடாமல் இருப்பதை உறுதி செய்வதற்காக இக்கொள்கை எமது பணிகளில் ஆழமாக பதிந்துள்ளது.

நவீன சமூகம் சார்ந்திருக்கும் முக்கிய சேவைகள் மற்றும் அமைப்புகளை ஆதரிப்பதில், மீள்திறன் கொண்ட டிஜிட்டல் உட்கட்டமைப்பின் முக்கியத்துவத்தை 2026ஆம் ஆண்டு உலகத் தொலைத்தொடர்பு மற்றும் தகவல் சமூக தினம் எடுத்துக் காட்டுகின்றது. இந்த டிஜிட்டல் உயிர்நாடிகள், அனர்த்தத்தின் போது முன்கூட்டியே எச்சரிக்கைகளை வழங்கவும், பாதுகாப்பான வழிசெலுத்தலை ஆதரிக்கவும், உலகளாவிய தரவுப் பிரவேசத்தைக் கொண்டு செல்லவும், அவசரகால தொடர்புகளைச் செயல்படுத்தவும், மற்றும் தேவைப்படும் போது சமூகங்களுக்கு இணைப்பை விரிவுபடுத்தவும் உதவுகின்றன. எனவே, இடையூறு காலங்களில் பொது நலனைப் பாதுகாக்கவும், அத்தியாவசிய சேவைகளைத் தவிர்க்கவும் மற்றும் பொருளாதார ஸ்திரத்தன்மையை ஆதரிக்கவும், அவற்றின் மீள்திறன் இன்றியமையாதது. இந்த ஆண்டின் கருப்பொருள், டிஜிட்டல் மீள்திறன் என்பது சர்வதேச ஒத்துழைப்பு, தரநிலைகள், திறன் மேம்பாடு, புத்தாக்கம் மற்றும் சர்வதேச தொலைத்தொடர்புகள் ஒன்றியத்தின் தொடர்ச்சியான முயற்சிகளால் ஆதரிக்கப்படும் பல அமைப்புகள் ஒன்றிணைந்து செயல்படுவதைச் சார்ந்துள்ளது என்பதையும் வலியுறுத்துகின்றது.

2030ஆம் ஆண்டுக்கான தேசிய டிஜிட்டல் பொருளாதார மூலோபாயத்தின் கீழ், டிஜிட்டல் முறையில் இணைக்கப்பட்ட மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய ஒரு தேசத்தை உருவாக்குவதில் இலங்கை உறுதியாக உள்ளது. தேசிய டிஜிட்டல் அடையாளம், தேசிய தரவுப் பரிமாற்றம் மற்றும் Govpay இன் விரிவாக்கம் போன்ற முக்கிய முன்னெடுப்புகள், நாட்டின் டிஜிட்டல் பொது உட்கட்டமைப்பை மேம்படுத்துவதோடு, மேலும் திறமையான மற்றும் எளிதான அணுகக்கூடிய டிஜிட்டல் சேவைகளுக்கு ஆதரவளிக்கின்றன. இதற்கு இணையாக இலங்கை தொலைத்தொடர்புச் சட்டத்தில் சமீபத்தில் மேற்கொள்ளப்பட்ட திருத்தமும், அதனைத் தொடர்ந்த தொலைத்தொடர்புத்துறை ஒழுங்குமுறைகளும், மேம்பட்ட இணைப்பு, வளர்ந்து வரும் தொழில்நுட்பங்கள் மற்றும் டிஜிட்டல் புத்தாக்கத்திற்கான ஒழுங்குமுறைச் சூழலை வலுப்படுத்தியுள்ளன. 5G செயலாக்கம், தொலைத்தொடர்பு உட்கட்டமைப்புப் பகிர்வு மற்றும் 2025 - 2029ஆம் ஆண்டுக்கான தேசிய இணையப் பாதுகாப்பு மூலோபாயம் ஆகியவற்றில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள், மீள்திறன் கொண்ட டிஜிட்டல் அமைப்புகளையும் பாதுகாப்பான டிஜிட்டல் சேவைகளையும் உருவாக்குவதில் இலங்கையின் அர்ப்பணிப்பு மேலும் பிரதிபலிக்கின்றன.

சர்வதேச தொலைத்தொடர்பு ஒன்றியத்தின் (ITU) 161ஆவது ஆண்டு நிறைவு விழாவும், 2026 உலகத் தொலைத்தொடர்பு மற்றும் தகவல் சமூக தினமும் (WTISD) இணைந்து உலகளாவிய அர்த்தமுள்ள இணைப்பிற்கு அடித்தளமிட்டு, சமூகங்கள் மற்றும் நாடு முழுவதும் பாதுகாப்பான, மலிவான மற்றும் பயனுள்ள டிஜிட்டல் அணுகலை ஆதரிக்கும் மீள்திறன் கொண்ட டிஜிட்டல் உட்கட்டமைப்பை உருவாக்குவதற்கு கூட்டு நடவடிக்கை அவசியம் என்பதை சரியான நேரத்தில் நினைவூட்டுகின்றன.

## டிஜிட்டல் பொருளாதார அமைச்சின் செயலாளர் அவர்களின் செய்தி



வருண ஸ்ரீ தனபால
செயலாளர் - டிஜிட்டல் பொருளாதார அமைச்சு
தலைவர் - இலங்கை தொலை தொடர்பு ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு

2026ஆம் ஆண்டு உலக தொலைத்தொடர்பு மற்றும் சமூக தினத்தை (WTISD) முன்னிட்டு எனது இதயபூர்வமான வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்வதில் பெரு மகிழ்ச்சியடைகின்றேன். சர்வதேச தொலைத்தொடர்பு ஒன்றியம் (ITU), உலக தொலைத்தொடர்பு மற்றும் சமூக தினத்துடன் இணைந்து தனது 161 வது ஆண்டு விழாவைக் கொண்டாடும் இவ்வாண்டின் கருப்பொருளான, டிஜிட்டல் உயிர்நாடிகள்: இணைக்கப்பட்ட உலகில் மீள்திறனை வலுப்படுத்தல் என்பது, பொது நலனையும் பொருளாதார நிலைத்தன்மையையும் பாதுகாக்கும் அதே வேளையில், இடையூறுகளைத் தாங்கி, அதற்கேற்ப தங்களை மாற்றியமைத்து, அதிலிருந்து மீண்டு வரக்கூடிய டிஜிட்டல் அமைப்புகளை உருவாக்குவதன் முக்கியத்துவத்தை எடுத்துரைக்கின்றது.

டிஜிட்டல் வலையமைப்புகளுக்கு, மீள்திறன் ஒரு அத்தியாவசியத் தேவையாகியுள்ளது. நவீன யுகத்தில் ஒரு நாட்டின் வலிமையானது, அதன் டிஜிட்டல் வலையமைப்பானது எவ்வளவு தூரத்திற்கு சிறப்பாக வடிவமைக்கப்பட்டு, பாதுகாக்கப்பட்டு, நெருக்கடிகளுக்குப் பதிலளிக்கத் தயாராக உள்ளன என்பதில் பிரதிபலிக்கின்றது. அவசர காலங்களில் தொடர்ந்து செயற்படுவதற்கும், விரைவில் மீண்டு வருவதற்குமான அவைகளின் திறன்களில்தான் அவற்றின் உண்மையான மதிப்பு காணப்படுகின்றது.

இத்தகைய மீள்திறனை அடைவதற்குப் பல்வேறு முனைகளில் தொடர்ச்சியான முயற்சிகள் தேவைப்படுகின்றன. பௌதிக தொலைத்தொடர்பு உட்கட்டமைப்பு வலுப்படுத்தல், தொழில்நுட்ப திறன்களை மேம்படுத்தல் மற்றும் மக்களுடைய டிஜிட்டல் அறிவு மற்றும் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்திறன்களை வழங்குதல் ஆகியவை இந்த செயல்முறையின் முக்கிய அடித்தளமாகும்.

தேசிய டிஜிட்டல் பொருளாதார வரைமுறைக்கு இணங்க, 5G நிறுவல், தொலைத்தொடர்பு உட்கட்டமைப்புப் பகிர்வு மற்றும் டிஜிட்டல் பொது உட்கட்டமைப்பு முயற்சிகளில் ஏற்பட்டுள்ள முன்னேற்றமானது, எல்லாச் சூழ்நிலைகளிலும் பொது மக்களுக்கு சேவை செய்யக்கூடிய நம்பகமான மற்றும் பதிலளிக்கக் கூடிய டிஜிட்டல் அமைப்புகளைக் கட்டமைப்பதற்கான இலங்கையின் முயற்சிகளைப் பிரதிபலிக்கின்றது. இம்முயற்சிகள், தேசிய அபிவிருத்திக்கான அடித்தளமாக டிஜிட்டல் வலையமைப்புகளை வலுப்படுத்துவதற்கான நமது உறுதிப்பாட்டையும் பிரதிபலிக்கின்றது.

இருப்பினும், இத்தகைய மீள்திறனை தனியே அரசாங்கத்தினால் மட்டும் அடைய முடியாது. இதற்கு அரசாங்கம், தனியார் துறை மற்றும் சமூகங்களுக்கிடையே நெருங்கிய ஒத்துழைப்பு தேவைப்படுகின்றது. டிஜிட்டல் வலையமைப்புகளை வலுப்படுத்தவும், அனைத்து மட்டங்களிலும் தயார்நிலைக் கலாசாரத்தை ஊக்குவிக்கவும், இந்த கூட்டாண்மை இன்றியமையாத ஒன்றாகும். கவனமான திட்டமிடல், சரியான நேரத்தில் எடுக்கப்படும் நடவடிக்கைகள் மற்றும் சிந்தனைமிக்க மீட்பு ஆகியவற்றின் மூலம் நம் அனைவருக்கும் பாதுகாப்பான, வலிமையான மற்றும் மீள்திறன்மிக்க எதிர்காலத்தை உருவாக்க முடியும்.

இந்நிகழ்வை நினைவு கூறும் இவ்வேளையில், சர்வதேச தொலைத்தொடர்பு ஒன்றியத்திற்கு (ITU) எனது இதயபூர்வமான வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்வதோடு, எதிர்வரும் ஆண்டுகளில் உலகளாவிய இணைப்பு, தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப மேம்பாடு மற்றும் சர்வதேச ஒத்துழைப்பை முன்னெடுத்துச் செல்வதில் அது தொடர்ந்தும் வெற்றிபெற எனது நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.



எயார் வைஸ் மார்ஷல்
பந்துல ஹேரத் (ஓய்வுபெற்ற)
பணிப்பாளர் நாயகம்
இலங்கை தொலை தொடர்பு ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு

## இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு பணிப்பாளர் நாயகம் அவர்களின் செய்தி

சர்வதேச தொலைத்தொடர்பு ஒன்றியத்தின் (ITU) அனுசரணையின் கீழ், 2026ஆம் ஆண்டு உலகத் தொலைத் தொடர்பு மற்றும் தகவல் சமூக தினத்தை (WTISD) கொண்டாடுவதில் இலங்கை உலக நாடுகளுடன் இணையும் வேளையில், எனது வாழ்த்துகளைத் தெரிவிப்பதில் நான் பெரு மகிழ்ச்சியடைகின்றேன். உலக தொலைத்தொடர்பு மற்றும் தகவல் சமூக தினம் என்பது இணையம் மற்றும் பிற தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பத்தினூடாக சமூக மற்றும் பொருளாதாரத்தினுள் உற்பத்தி செய்யக்கூடிய வாய்ப்புகள் மற்றும் நன்மைகள் குறித்த விழிப்புணர்வை பொதுமக்களுக்கு ஏற்படுத்துவதாகும். மேலும் டிஜிட்டல் இடைவெளியை குறைப்பதற்கும் சமூகத்திலுள்ள அனைவரையும் உள்ளடக்கிய அபிவிருத்தியை ஊக்குவிப்பதற்கும் அவற்றின் ஆற்றலையும் இது எடுத்துக் காட்டுகின்றது.

இவ்வாண்டின் கருப்பொருளான "இணைக்கப்பட்ட உலகில் மீள்திறனை வலுப்படுத்த டிஜிட்டல் உயிர்நாடிகள்" என்பது, நவீன சமூகத்தில் மீள்திறன் கொண்ட டிஜிட்டல் அமைப்புகளில் அதிகரித்து வரும் முக்கியத்துவத்தின் மீது கவனத்தை ஈர்க்கின்றது. டிஜிட்டல் உயிர்நாடிகள், மக்களுக்கு குறிப்பாக மாணவர்கள், நோயாளிகள், முதியவர்கள் மற்றும் சமூக பொருளாதார சவால்களை எதிர்கொள்பவர்கள் போன்ற நலிவடைந்த குழுக்களுக்கு ஆதரவளித்து, பாதுகாத்து அவர்களை இணைப்பதன் மூலம் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதில் முக்கிய பங்கு வகிக்கின்றது. இயற்கை அனர்த்தங்கள், பொது சுகாதார அவசர நிலைகள் மற்றும் பிற இடையூறுகள் உள்ளிட்ட நெருக்கடி காலங்களில் அவற்றின் முக்கியத்துவம் இன்னும் அதிகமாகின்றது.

சுகாதாரம், கல்வி மற்றும் அவசர கால உதவி போன்ற அத்தியாவசிய சேவைகளுக்கான உட்பிரவேசத்தை சாத்தியமாக்குவதன் மூலம் டிஜிட்டல் உயிர்நாடிகள் பரந்த உள்ளடக்கம், மீள்திறன் மற்றும் ஒட்டுமொத்த நல்வாழ்விற்குப் பங்களிக்கின்றன. மேலும் அவை அன்றாட வாழ்வில் பாதுகாப்பான மற்றும் அதி சுதந்திர வாழ்க்கைக்கு ஆதரவளிக்கின்றன. நம்பகமான அதிவேக மற்றும் குறைந்த தாமத இணைப்பு வசதியை வழங்கும் மேம்பட்ட தகவல் தொடர்புத் தொழில்நுட்பங்கள் குறிப்பாக 4G மற்றும் 5G வலையமைப்புகள், இந்த உயிர்நாடிகளின் செயல்திறனை மேலும் வலுப்படுத்துகின்றது.

இச்சூழலில் நாட்டில் 5G தொழில்நுட்பத்தின் வணிக ரீதியான அறிமுகத்துடன், 2026ஆம் ஆண்டு இலங்கைக்கு ஒரு முக்கிய மைல்கல்லாக அமைகின்றது. இவ் வளர்ச்சியானது, இணைப்பை விரிவுபடுத்துவதன் மூலமும், சேவை வழங்கலை மேம்படுத்துவதன் மூலமும் மற்றும் பல துறைகளில் புதுமைகளை ஊக்குவிப்பதன் மூலமும் டிஜிட்டல் உயிர்நாடிகளை மேலும் வலுப்படுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. எனவே மேலும் இணைக்கப்பட்ட அனைவரையும் உள்ளடக்கிய மற்றும் மீள்திறன் கொண்ட ஒரு சமூகத்தை கட்டமைப்பதற்காக அடுத்த தலைமுறை டிஜிட்டல் உட்கட்டமைப்பை பயன்படுத்திக் கொள்ளும் சிறந்த நிலையில் இலங்கை காணப்படுகின்றது.

இம்மகத்தான நாளை நாம் கொண்டாடும் இவ்வேளையில் சர்வதேச தொலைத்தொடர்பு ஒன்றியம் அதன் எதிர்கால முயற்சிகளில் தொடர்ந்து வெற்றி பெற வாழ்த்துகின்றேன். மேலும் 2026ஆம் ஆண்டு உலக தொலைத்தொடர்பு மற்றும் தகவல் சமூக தினத்திற்கு கலந்து கொண்ட அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.




# உலக தொலைத்தொடர்பு மற்றும் தகவல் சமூக தினம்



உலக தொலைத்தொடர்பு மற்றும் தகவல் சமூக தினமானது 1969ஆம் ஆண்டு முதல் ஒவ்வொரு வருடமும் மே மாதம் 17ஆம் திகதியன்று கொண்டாடப்படுகின்றது. இத்தினத்தில் 1865ஆம் ஆண்டில் முதல் சர்வதேச தந்தி ஒப்பந்தம் கையெழுத்திடலுடன் சர்வதேசத் தொலைத்தொடர்பு ஒன்றியம் (ITU) - ஐக்கிய நாடுகளின் டிஜிட்டல் தொழிநுட்பத்திற்கான முகவர் நிலையம் நிறுவப்பட்டமையை நினைவு கூறுகின்றது.

சமூக மற்றும் பொருளாதார முன்னேற்றத்தை ஏற்படுத்தும் நோக்கில் தகவல் மற்றும் தொடர்புத் தொழிநுட்பங்கள் (ICTs) ஆற்றி வருகின்ற முக்கிய பங்கு குறித்து உலகளாவிய விழிப்புணர்வை மேம்படுத்துவதே உலக தொலைத்தொடர்பு மற்றும் தகவல் சமூக தினத்தின் அடிப்படை நோக்கமாகும். மேலும் இது டிஜிட்டல் இடைவெளியை குறைத்தல் மற்றும் அனைவருக்கும் டிஜிட்டல் வளங்களுக்கான சாதாரண மற்றும் சமமான அணுகலை உறுதி செய்வதன் முக்கியத்துவத்தை வலியுறுத்துகின்றது.

## வரலாற்றுப் பின்னணி

1865ஆம் ஆண்டு மே மாதம் 17ஆம் திகதி சர்வதேசத் தொலைத்தொடர்பு ஒன்றியம் (ITU) நிறுவப்பட்டதும், பெரிஸில் முதல் சர்வதேச தந்தி ஒப்பந்தம் கையெழுத்திட்டதை நினைவு கூறி, 1969ஆம் ஆண்டு மே மாதம் 17ஆம் திகதி முதன் முதலில் உலக தொலைத்தொடர்பு தினம் (WTD) நினைவு கூறப்பட்டது. பின்னர், 1973இல் ஸ்பெயினின் டொரெமோலினோஸில் நடைப்பெற்ற சர்வதேசத் தொலைத்தொடர்பு ஒன்றியத்தின் முழு அதிகாரம் பெற்ற கொள்கை வகுத்தல் மாநாட்டின் போது இவ்விழா உத்தியோகபூர்வமாக நிறுவப்பட்டது.

அதனைத் தொடர்ந்து 2005ஆம் ஆண்டில் ஒன்று கூட்டப்பட்ட தகவல் சமூகத்திற்கான உலக உச்சி மாநாட்டினால் (WSIS), மே மாதம் 17ஆம் திகதி உலக தகவல் சமூக தினமாக (WSIS), அறிவிக்குமாறு ஐக்கிய நாடுகள் பொதுச் சபைக்கு பிரேரணை செய்யப்பட்டது. தகவல் மற்றும் தொடர் தொழிநுட்பங்களின் (ICTs) வளர்ச்சியின் முக்கியத்துவத்தை வலியுறுத்துவதும், அவற்றின் அபிவிருத்தி மற்றும் பயன்பாட்டுடன் தொடர்புடைய பரந்த அளவிலான சமூக மற்றும் பொருளாதார சவால்களுக்கான தீர்வை தேடுவதற்கான அவதானத்தை உட்படுத்துவதும் இதன் பிரதான நோக்கமாகும்.

2006ஆம் ஆண்டு மார்ச் மாதம், ஐக்கிய நாடுகள் பொதுச் சபை மே மாதம் 17ஆம் திகதி "உலகத் தகவல் சமூக தினம்" ஆக அதிகாரப்பூர்வமாக அறிவித்தது. அதே ஆண்டின் பிற்பகுதியில், துருக்கியின் அன்டால்யாவில் நடைபெற்ற சர்வதேச தொலைத்தொடர்பு ஒன்றியத்தின் முழு அதிகாரம் மிக்க கொள்கை வகுத்தல் மாநாட்டின் போது, இவ்விரு விழாக்களையும் ஒன்றிணைக்க முடிவு செய்யப்பட்டது. அதன் விளைவாக, இந்த ஒருங்கிணைந்த விழா "உலகத் தொலைத்தொடர்பு மற்றும் தகவல் சமூக தினம்" என அறியப்பட்டது.

நவீன சமூகத்தில் தகவல் மற்றும் தொடர்பு தொழிநுட்பங்களின் (ICTs) மாற்றியமைக்கும் ஆற்றலை வலியுறுத்துவதற்கான ஒரு முக்கிய தளமாக உலக தொலைத்தொடர்பு மற்றும் தகவல் சமூக தினம் விளங்குகின்றது. இதன்போது அனைத்து நபரும் மற்றும் பிரஜைகளுக்கும் தகவல் மற்றும் தொடர்பு தொழிநுட்பங்களிற்கு பிரவேசிப்பதற்கு முடியுமென மற்றும் அவைகளை பயன்படுத்த முடியுமென உறுதிப்படுத்துவதற்குத் தேவையான உத்திகள், செயற்பாடுகள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் அவசியத்திற்கு அவதானத்தை உட்படுத்துவதோடு, தொழிநுட்பத்தை அணுகுவதில் உள்ள ஏற்றத்தாழ்வுகளைக் குறைப்பதற்கான சர்வதேச ரீதியில் மேற்கொள்கின்ற முயற்சிகளையும் ஊக்குவிக்கின்றது.

ஒவ்வொரு வருடமும், உலகளாவிய கொண்டாட்டங்களை நடாத்துதல் மற்றும் தொலைத்தொடர்பு மற்றும் தகவல் சமூகம் தொடர்பான சமகாலப் பிரச்சினைகள் குறித்து அர்த்தமுள்ள உரையாடலை ஊக்குவிப்பதற்கும் ஒரு விசேடமான கருப்பொருள் ஒன்று தேர்ந்தெடுக்கப்படுகின்றது.

## 2026ஆம் ஆண்டின் உலகத் தொலைத்தொடர்பு மற்றும் தகவல் சமூக தினத்தின் கருப்பொருள்

"டிஜிட்டல் உயிர்நாடிகள்: இணைக்கப்பட்ட உலகில் மீள்திறனை வலுப்படுத்தல்" என்பதாகும். இந்தக் கருப்பொருள், நவீன வாழ்க்கைக்கு அத்தியாவசியமாக விளங்கும் டிஜிட்டல் அமைப்புகளை வலுப்படுத்துவதன் முக்கியத்துவத்தை வலியுறுத்துகின்றது. இது, உலகை இயங்க வைக்கும் டிஜிட்டல் வலையமைப்புகளை மற்றும் சேவைகளை சிறப்பாக வலுப்படுத்துகின்ற அரசாங்கங்கள், தொழில்துறை மற்றும் சமூகங்களைக் கேட்டுக் கொள்வதோடு, வாழ்வும் மற்றும் வாழ்வாதாரத்தையும் பாதுகாத்துக் கொண்டு, இடையூறுகளை தாங்கிக் கொள்ளவும், நிலைத்தன்மையை வைத்துக் கொள்ளல் மற்றும் மீண்டு வரக்கூடிய டிஜிட்டல் முறைமையை கட்டியெழுப்பவதை உறுதிப்படுத்தும்.

## தகவல் தொடர்பு வலையமைப்பின் மீள்திறனை வலுப்படுத்தல்

தற்போது உலகலாவிய ரீதியில் பரவலடைந்துள்ள டிஜிட்டல் உள்ளக்கிய தொடர்பாடல் வலையமைப்பின் ஊடாக அன்றாட வாழ்க்கை, பொருளாதார நடவடிக்கைகள் மற்றும் பொதுச் சேவைகளுக்கு அத்தியாவசிய கடமைகளை மேற்கொள்கின்றது. இவ் வலையமைப்புகள் நம்பகத்தன்மையற்றதாக மாறும் போது அல்லது செயலிழக்கும் போது அதன் விளைவுகள் சமூகத்தில் பல்வேறு களங்களுக்கு பரவலாகவும் கடுமையாகவும் தாக்கத்தை செலுத்தியுள்ளது. வலையமைப்பு செயலிழப்பில் ஏற்படுகின்ற உடனடி தாக்கங்களாக இணைப்பின் பேரில் உள்ள விடயங்களை மேற்கொள்ள இயலாமையானது தனிநபர்கள், வணிகம் மற்றும் முழுப் பொருளாதாரங்களையும் பாதிக்கக் கூடும். இந்தக் காரணத்தினால், குறிப்பாக அவசரகால அல்லது அனர்த்த காலங்களில், தொடர்ச்சியான மற்றும் நிலையான வலையமைப்புச் செயற்பாடுகளைப் பராமரிப்பது ஒரு முக்கிய விடயமாக கருதப்படுகின்றது.

தகவல் தொடர்பு வலையமைப்பானது இரண்டு அடிப்படை கொள்கைகளின் கீழ் கட்டமைக்கப்பட்டுள்ளது:

வலையமைப்பு மிகைப்பணி (தொடர்ச்சியான செயற்பாடு, நம்பத்தன்மை மற்றும் கோளாறுகளை அகற்றுவதை உறுதிப்படுத்துவதற்கு வலையமைப்பு முறைமையின் மேலதிக கூறுகள், வழி அல்லது தரவு) மற்றும் பல்வகை வலையமைப்பு. வலையமைப்பு மிகைப்பணி என்பது சப்மெரின் கேபள்கள், தரைவழிப் பரிமாற்ற அமைப்புகள், செயற்கைகோள்கள் மற்றும் தரவு மையங்கள் போன்ற முக்கிய கூறுகளில், செயலிழப்புகள் ஏற்படும்போது பொறுப்பேற்கத் தயாராக இருக்கும் காப்பு அமைப்புகள் இருப்பதை உறுதி செய்கின்றது. வலையமைப்பு பன்முகத் தன்மையானது, வெவ்வேறு தொழில்நுட்பங்கள், வழங்கீட்டாளர்கள் மற்றும் வழிகளை பயன்படுத்தி ஒரே ஒரு செயலிழப்பு காரணத்தினால் முழு அமைப்பையும் சீர்குலைக்கும் வாய்ப்பைக் குறைக்கிறது. இதற்கு மேல், மின் வழங்கீடு முறைமை, தொலைத்தொடர்பு கோபுரங்கள் மற்றும் அணுகல் வசதிகள் போன்ற பௌதீக உட்கட்டமைப்பு வசதிகளை வலுப்படுத்துவதும் விரைவான மீட்புக்கு மிகவும் முக்கியமானது. கிளவுட் கம்ப்யூட்டிங், மெய்நிகராக்கம் மற்றும் செயற்கை நுண்ணறிவு உள்ளிட்ட நவீன தொழில்நுட்ப பயன்பாட்டில் வலையமைப்புகளின் நெகிழ்வான பணிச்சுமைப் பகிர்வைச் செயல்படுத்துவதன் மூலம் மீள்திறனை மேலும் மேம்படுத்துகின்றன. மென்பொருள் வரையறுக்கப்பட்ட வலையமைப்பு (SDN) போன்ற கருவிகள், செயற்கை நுண்ணறிவு (AI) மற்றும் இயந்திரக் கற்றலுடன் இணைந்து செயற்படும்போது, சிக்கல்களை முன்கூட்டியே கண்டறியவும், இடையூறுகளின் போது வலையமைப்புகள் தன்னியக்கமாக மாறும் தன்மையுடன் தங்களைத் தகவமைத்துக் கொள்ளவும் ஒத்துழைக்கின்றது. தொழிநுட்பத் தீர்வுகளுக்கு அப்பால், குறிப்பாக முக்கியத் துறைகள் பாதிக்கப்படும் போது, செயலிழப்புகளுக்கு விரைவாக பதிலளிக்க, இயக்குபவர்கள், ஒழுங்குபடுத்துபவர்கள் மற்றும் பங்குதாரர்களிடையே பயனுள்ள ஒத்துழைப்பு அவசியமாகும். விசேடமாக தீர்மானம்மிக்க பிரிவுகளுக்கு பாதிப்புகள் ஏற்படுகின்ற சந்தர்ப்பங்களில் தடைகளுக்கான மிக விரைவான பதில்களை வழங்க இது பெரிதும் உதவுகின்றது.

## வலையமைப்பு மீள்திறனிற்கான சவால்கள்

தகவல் தொடர்பு வலையமைப்புகள், அவற்றின் மீள்திறனுக்கு அச்சுறுத்தலாக அமையக்கூடிய பலதரப்பட்ட சவால்களை எதிர்கொள்கின்றன. இயற்கை அனர்த்தங்கள், குறிப்பாக தீவிர வானிலை நிகழ்வுகள், நம்பகமான தகவல் தொடர்பு மிகவும் தேவைப்படும் நேரங்களில் உட்கட்டமைப்பிற்கு கடுமையாக சேதப்படுத்தக்கூடும். புயல், வெள்ளம், காட்டுத்தீ போன்ற நிகழ்வுகள், தற்போதுள்ள அமைப்புகளின் பாதிப்புக்குள்ளாகும் தன்மையையும், அவற்றை வலுப்படுத்த வேண்டியதன் அவசியத்தையும் எடுத்துக் காட்டியுள்ளன. மின்சாரத் தடைகள், வலையமைப்பு சீர்குலைவுகளுக்கான முக்கிய காரணங்களில் ஒன்றாகும். இது வன்பொருள் மற்றும் மென்பொருள் செயல்பாடுகள் இரண்டையும் பாதிக்கிறது. நிலையான வலையமைப்புகளை விட அலைபேசி வலையமைப்புகள் இத்தகைய செயலிழப்புகளால் எளிதில் பாதிக்கப்படுகின்றன. மேலும், இறுதிப் பயனர்களுக்கு அருகிலுள்ள அணுகல் வலையமைப்புகள், மைய வலையமைப்புக் கூறுகளை விட பொதுவாகக் குறைந்த மீள்திறன் கொண்டவையாக இருக்கின்றன. சில கூறுகள், குறிப்பாக பரிமாற்ற இணைப்புகள், நிலைமாற்ற முனைகள் மற்றும் இணையப் பரிமாற்றப் இடங்கள் போன்ற பிரதான உட்கட்டமைப்பில் உள்ளவை மிகவும் முக்கியமானவை. ஏனெனில் அவற்றின் செயலிழப்பு தகவல் தொடர்பு சேவைகளை கணிசமாக சீர்குலைக்கக் கூடும் என்பதோடு, அது முழு வலையமைப்பு செயற்பாட்டிற்கும் பாரிய பாதிப்பை ஏற்படுத்தும்.

பெரும்பாலான சர்வதேச தரவுப் போக்குவரத்தைக் கொண்டு செல்லும் சப்மெரின் கேபிள்கள், உலகளாவிய இணைப்பில் ஒரு மையப் பங்கை வகிக்கின்றன. பெரும்பாலான கேபிள் கோளாறுகள், மீன்பிடி நடவடிக்கைகள் அல்லது கப்பல்கள் நங்கூரங்களை இழுத்துச் செல்வது போன்ற மனிதச் செயல்பாடுகளால் ஏற்படுகின்றன. அதே சமயம் நிலநடுக்கம், சுனாமி மற்றும் நீருக்கடியில் உள்ள நீரோட்டங்கள் போன்ற இயற்கை நிகழ்வுகள் அரிதாகவே காரணமாக அமைகின்றன. இந்த அமைப்புகள் தரைவழி வலையமைப்புகளுடன் இணையும் கேபிள் தரையிறங்கும் நிலையங்களும், பாதிப்புக்குள்ளாகக்கூடிய சாத்தியமான இடங்களாக உள்ளன.

## வலையமைப்பு மீள்திறனை வலுப்படுத்துவதற்கான பொறியியல் அணுகுமுறைகள்

மீள்திறனை மேம்படுத்துவதற்காக, வலையமைப்புகள் கட்டமைப்பு மற்றும் செயல்பாட்டு நடவடிக்கை ஆகிய இரண்டையும் வலிமைமிக்க திட்ட முறையை பயன்படுத்துகின்றது. மாற்று வழிகளும் மற்றும் மேலதிக வளங்களும் கிடைப்பதை உறுதி செய்ய, வலையமைப்பு மிகைத்தன்மையும் மற்றும் வலையமைப்பு பன்முகத்தன்மையும் பல்வேறுபட்ட அடுக்களின் கீழ் செயல்படுத்தப்படுகின்றன. அத்தோடு, வலையமைப்புப் பிரித்தல் என்பது மற்றொரு முக்கியமான உத்தியாகும். இது பெரிய வலையமைப்புகளை சிறிய பிரிவுகளாகப் பிரிக்க அனுமதிக்கின்றது. இதன் மூலம் கோளாறுகளைத் தனிமைப்படுத்திப் பரவாமல் தடுக்க முடியும். சில சமயங்களில், இயல்பு நிலை திரும்பும் வரை இடையூறுகளின் போது வலையமைப்பின் சில பகுதிகள் தன்னிச்சையாகச் செயல்பட முடியும். சப்மெரின் கேபிள் வழித்தடங்களை விரிவுபடுத்துவதும் செயற்கைக்கோள் வலையமைப்புகளை ஒருங்கிணைப்பதும், அவசர காலங்களில் நம்பகம்மிக்க மாற்று இணைப்பை வழங்க முடியும்.

செயல்பாட்டு மீள்திறனை வலுப்படுத்துவதற்கு, நவீன வலையமைப்பு முகாமைத்துவ அமைப்புகள் மூலம் தன்னியக்கத்தைப் பயன்படுத்தி கண்காணித்தல், இயல்பு மீறல்களைக் கண்டறிதல் மற்றும் மீட்பு நடவடிக்கைகளைத் ஆரம்பித்தல் மேற்கொள்ளப்படும். இந்தத் திறன்கள் வலையமைப்பின் வெவ்வேறு அடுக்களின் ஊடாக சேவைத் தொடர்ச்சியைப் பராமரிக்க மிகவும் உதவுகின்றன. மேலும் தகவல் தொடர்பு வலையமைப்புகள் மற்ற உட்கட்டமைப்புகளை, குறிப்பாக மின்வலு அமைப்பின் கிழ் பெரிதும் சார்ந்துள்ளது. ஆகையால் மின்வெட்டு, வலையமைப்பு சேவைத் தடைகளுக்கு பிரதான காரணமாக இருப்பதால், மின்சார விநியோகத்தின் நம்பகத்தன்மையை மேம்படுத்துவது அத்தியாவசியமான ஒன்றாகும். இதற்கு விசேடமாக அலைப்பேசி ஆதார நிலையங்களுக்கு மாற்று மின் அமைப்புகள், மின்னாக்கிகள் மற்றும் பல்வகைப்பட்ட மின் மூலங்கள் போன்ற நடவடிக்கைகள், குறிப்பாக நகரும் அடிப்படை நிலையங்களுக்குப் பரவலாகப் பயன்படுத்தப்படுகின்றன. சூரிய அல்லது காற்றாலை போன்ற புதுப்பிக்கத்தக்க மின்வலு தீர்வுகள் மாற்று வழிகளாக பயன்படுத்த முடியும். இருப்பினும் அவை சுற்றுச் சூழல் நிலமைகளின் கீழ் குறிப்பிட்ட எல்லையில் செயற்படலாம். அனர்த்த நிலமைகளின் போது கையால் கொண்டு செல்லக்கூடிய மின்வலு தீர்வுகள் அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மீட்பு முயற்சிகளுக்கான விரைவான உதவிக்கு வழிவகுக்கும்.

கோபுரங்கள், கட்டிடங்கள் மற்றும் செல்லிடத்தளங்கள் போன்ற உட்கட்டமைப்புகளின் பௌதீக உறுதித்தன்மை மற்றுமொரு முக்கிய காரணியாகும். பொருத்தமான தளத் தேர்வு, நிலச்சரிவுகளால் மண் பாதிக்கப்படும் தன்மையை மதிப்பீதல், கட்டமைப்பு நிலைத்தன்மை பகுப்பாய்வுகளை நடத்துதல் மற்றும் தேவையான வலுவூட்டல்களை செயல்படுத்துதல் ஆகியவை மூலம் இந்தச் சொத்துக்கள் இயற்கை அனர்த்தத்தை திறம்படத் தாங்குவதை உறுதிசெய்யப் பங்களிக்கின்றன. மீட்பு முயற்சிகளின் போது இந்தத் தளங்களுக்கான அணுகலும், சம முக்கியத்துவம் வாய்ந்தது. ஏனெனில் சேதமடைந்த போக்குவரத்து உட்கட்டமைப்பு பழுதுபார்ப்புகளைத் தாமதப்படுத்தக்கூடும். முக்கியமான தள இருப்பிடங்களுக்குத் தேவையான அணுகல் மற்றும் தளவாடங்களை எளிதாக்குவதற்கு ஆயுதப்படைகள் மற்றும் அவசரகால சேவைகள் போன்ற அரசாங்க அதிகாரிகளுடன் ஒருங்கிணைப்பின் அவசியத்தை இது எடுத்துக்காட்டுகிறது. அதற்கு மேலதிகமாக முக்கியமான தளங்களுக்கு அருகில் திறமையான பணியாளர்களை மற்றும் வளங்களை நிலைநிறுத்துவது உள்ளிட்ட முன் திட்டமிடல், அனர்த்தங்கள் ஏற்படும்போது மீட்பு நேரங்களை குறைத்து வினைத்திறனை மேம்படுத்த முடியும்.

தொழிநுட்ப நடவடிக்கைகளுடன், நிறுவன உத்திகளும் வலையமைப்பின் மீள்திறனை வலுப்படுத்துவதில் முக்கியப் பங்கு வகிக்கின்றன. சேவை வழங்குநர்கள், ஒழுங்குமுறை அமைப்புகள் மற்றும் பிற பங்குதாரர்களிடையே உள்ள ஒத்துழைப்பு, இடையூறுகளுக்கு வேகமான மற்றும் ஒருங்கிணைந்த பதிலளிப்பு வழங்க உதவும். விசேடமாக ஏரிசக்தி, போக்குரத்து மற்றும் தகவல் தொடர்பு போன்ற பல உட்கட்டமைப்புகள் ஒரே நேரத்தில் பாதிக்கப்படும் பெரிய அளவிலான நெருக்கடிகளின் போது, பல்துறை ஒத்துழைப்பு மிகவும் முக்கியத்துவம் பெறுகிறது. இங்கு முக்கிய வழிமுறையாக தொடர்ந்தும் அவசர நிலை பயிற்சி வழக்கமான அவசரகால ஒத்திகைகளை நடத்துதல், தெளிவான தகவல் தொடர்பு நெறிமுறைகளை நிறுவுதல், வரையறுக்கப்பட்ட பணிகள் மற்றும் பொறுப்புக்களை ஒதுக்குதல் மற்றும் நெருக்கடிச் சூழ்நிலைகளை திறம்படக் கையாள ஊழியர்களுக்குப் பயிற்சி அளித்தல் ஆகியவை முக்கிய நடைமுறைகளாகும். இந்த முயற்சிகள் தயார்நிலையை உறுதி செய்யவும், பதிலளிப்புத் திறனை மேம்படுத்தவும், விரைவான சேவை மீட்டெடுப்பிற்கு ஆதரவளிக்கவும் உதவுவதோடு, பணியாளர்களின் பாதுகாப்பையும் உறுதி செய்கின்றன.

ஒட்டுமொத்தமாக, மீள்திறன் கொண்ட தகவல் தொடர்பு வலையமைப்புகளைக் கட்டமைக்க, தொழிநுட்பத் தீர்வுகள் மற்றும் நிறுவன ரீதியான தயார்நிலை ஆகியவற்றின் கலவை அவசியமாகும். வலுவான உட்கட்டமைப்பு வடிவமைப்பு, நவீன தொழில்நுட்பங்களை பயன்படுத்துதல் மற்றும் வினைத்திறன்மிக்க ஒத்துழைப்புக் கட்டமைப்புகளை ஒருங்கிணைப்பதன் மூலம், வலையமைப்புகள் இடையூறுகளுக்கு சரியான முறையில் முகம் கொடுத்து, விரைவாக மீண்டு வரமுடியும். அதனூடாக அத்தியாவசிய சேவைகளின் தொடர்ச்சியை மற்றும் நம்பகத்தன்மையை தொடர்ந்தும் கொண்டுசெல்வது நிச்சயமாகும்.

# "கமட்ட சன்னிவேதனய" மற்றும் 'பாடசாலை வலையமைப்பு' திட்டத்தின் ஊடாக டிஜிட்டல் இணைப்பு

## சேவை வழங்கல் ஊடாக டிஜிட்டல் சேவையை விரிவாக்கி இடைவெளியை குறைத்தல்

இன்று முழு உலக மக்களும் உலகத் தொலைத்தொடர்பு மற்றும் தகவல் சமூக தினத்தை (WTISD) கொண்டாடும் வேளையில் "டிஜிட்டல் உயிர்நாடிகள்: இணைக்கப்பட்ட உலகில் மீள்திறனை வலுப்படுத்தல்" என்ற கருப்பொருளின் மீது உலகளாவிய கவனம் திரும்பியுள்ளது.

சர்வதேச அடிப்படையில் சப்மெரின் கேபள்கள் மற்றும் செயற்கைகோள் வலையமைப்பு போன்ற பாரிய முறைமைகள் பற்றி பேசப்படும் வேளையில் இலங்கையின் கிராமப்புறங்களில் "உயிர்நாடி" என்பதற்கான வரைவிலக்கணம் மிகவும் தனித்துவமானது. அது தொலைத்தூர கிராமத்தில் உள்ள மாணவர் ஒருவருக்கு டிஜிட்டல் நூலகத்தை அணுகுவதற்கும், ஒரு விவசாயி சந்தை விலைகளைச் சரிபார்ப்பதற்றும், ஒரு சிறு கைத்தொழில் உலகளாவிய சந்தையை அடைவதற்குமான திறனாகும். இருப்பினும், இவ்வாறான இணைப்புகள் செயல்படுவதற்கு ஒரு வலுவான பௌதீக அடித்தளம் தேவைப்படுகிறது. இந்த நோக்கை செயற்படுத்தவற்கு இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவினால் (TRCSL) செயற்படுத்துகின்ற 'கமட்ட சன்னிவேதனய' மற்றும் 'பாடசாலை வலையமைப்பு' ஆகிய பிரதான இரண்டு திட்டங்கள் ஊடாக டிஜிட்டல் இணைப்பு மற்றும் சேவை வழங்கல் சமநிலையற்றதன்மையை குறைத்து, இலங்கையில் எந்தவொரு கிராமமும் அல்லது வகுப்பறையோ தகவல் தொழிநுட்பத்தில் பின் தங்கி விடாமல் இருப்பதை உறுதி செய்வதன் மூலம் நாட்டின் தொடர்பாடல் முறைமையை புதிய திசைக்கு கொண்டு செல்கின்றது.



### 'கமட்ட சன்னிவேதனய' திட்டம் (GSP)

இந்த மாற்றத்தின் ஒரு பிரதான நிகழ்ச்சித் திட்டமாகிய "கமட்ட சன்னிவேதனய" திட்டமானது, இலங்கை தொலைத்தொடர் ஆணைக்குழுவினால் செயற்படுத்துகின்ற தேசிய நிகழ்ச்சித் திட்டம் என்பதோடு, இத்திட்டம் 2029ஆம் ஆண்டின் இறுதிக்குள் சுமார் 600 கோபுரங்களை நிறைவு செய்வதன் மூலம், நாடு முழுவதும் 100% 4G.'.பைபர் (fiber) இணைப்பு என்ற தொலைநோக்குப் பார்வையை விரைவில் நனவாக்குவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. இணைப்பு என்பது இனி ஒரு ஆடம்பரப் பொருள் அல்ல, அது சமூக மற்றும் பொருளாதார மீள்திறனிற்கு அத்தியாவசியமான அடிப்படை என்பதை 2026ஆம் ஆண்டின் கருப்பொருள் வலியுறுத்துகின்றது. தேசிய வலையமைப்பு சேவை குறைவான அல்லது இல்லாத இடங்களை அடையாளம் கண்டு, அந்த பிரதேசங்களுக்கு இணைப்பை வழங்குவது இத்திட்டம் செயற்படுகின்றது. 25 மாவட்டங்கள் மற்றும் 14,000 கிராம அலுவலர் பிரிவுகள் முழுவதும் ஒரு விரிவான கணக்கெடுப்பை நடாத்தி, பொது மக்களின் புகார்களுக்கு முன்னுரிமை அளித்ததைத் தொடர்ந்து, பாரம்பரிய சந்தை செயற்பாட்டின் மூலம் முன்பு சென்றடைய முடியாத போதிய சேவைகள் கிடைக்கப்படாத பகுதிகளை இந்தத் திட்டம் இலக்காக் கொண்டுள்ளது.

85 கோபுரங்களை வெற்றிகரமாக நிறைவு செய்து, முன்பு போதிய சேவை கிடைக்காத பகுதிகளுக்கு உடனடி நிவாரணம் அளிப்பதன் மூலம், முழுமையான இணைப்பு என்ற தனது இலக்கை நோக்கி இந்தத் திட்டம் சீராக முன்னேறி வருகிறது. உலகளாவிய பொருளாதார சவால்கள் மற்றும் அதிகரித்து வரும் செயல்பாட்டுச் செலவுகள் இருந்த போதிலும், அரசக் கோபுரக் கட்டுமானத்தை விரைவுபடுத்துவதற்காக திருத்தப்பட்ட வழிகாட்டல்களை அறிமுகப்படுத்தியுள்ளது. இந்த ஆண்டில் மட்டும் 150க்கும் மேற்பட்ட புதிய தொலைத்தொடர்பு கோபுரங்களை நிறுவும் உறுதியுடன், மிகவும் தொலைத்தூர சமூகங்கள் சமனான சேவை இணைப்பை வழங்குவதை இந்தத் திட்டம் உறுதி செய்கிறது.

### 'பாடசாலை பைபர் (fiber)" திட்டம் : அடுத்த தலைமுறைக்கு வலுவூட்டுதல்.

கிராமிய பிரதேசங்களுக்கு இணைய இணைப்பை வழங்குவது மட்டும் போதுமானதல்ல. அதன் அபிவிருத்தியை ஏற்படுத்துவது, அதனை கல்விக்குள் இணைத்து, பிள்ளைகளுக்கு அறிவு, திறன் மற்றும் உலகளாவிய சந்தர்ப்பத்தை வழங்கும்போது, வகுப்பறையினுள் உள்ள இணைப்பில் தான் எதிர்காலம் கட்டமைக்கப்படுறது. "பாடசாலை பைபர் (fiber)" திட்டம் ஊடாக நாடு முழுவதும் உள்ள சுமார் 6000 இடைநிலைப் பாடசாலைகளுக்கு அதிவேக மற்றும் நம்பகமான இணைய வசதிகளை வழங்குவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. இந்த முன்னெடுப்பானது டிஜிட்டல் கற்றலை மேம்படுத்தவும், நிர்வாகத் திறனை அதிகரிக்கவும் மற்றும் நவீன கல்வி தொழிநுட்ப கருவிகளுக்கு ஆதரவளிக்கவும் வடிகவமைக்கப்பட்டுள்ளது.

இன்று வரை இலங்கை தொலைத் தொடர்பு நிறுவனத்தால் (SLT), 1314 பைபர் ஒப்டிக் (fiber optic) உட்கட்டமைப்பு மூலம் வெற்றிகரமாக இணைக்கப்பட்டுள்ளன. மேலும் 607 பாடசாலைகள் தற்போது செயல்படுத்தும் கட்டத்தில் உள்ளன. இத்திட்டத்தை விரிவுபடுத்தும் அடுத்த கட்ட நடவடிக்கை இப்போதைக்கும் தேர்ந்தெடுத்துள்ளதோடு, அதன்படி பைபர் (fiber) இணைப்பிற்காக மேலும் 1495 பாடசாலைகளை இலக்காகக் கொண்டுள்ளது. இந்த நிகழ்ச்சித்திட்டமானது இணைய வசதியை வழங்குவதோடு மட்டுமல்லாமல், டிஜிட்டல் கற்றல் கருவிகளை ஆதரிப்பதன் மூலமும் மற்றும் நாடு முழுவதும் நிர்வாகத் திறனை மேம்படுத்துவதற்கு முக்கியமானதொரு ஆதரவை வழங்கும்.

நாம் உலகத் தொலைத்தொடர்பு மற்றும் தகவல் சமூக தினத்தை (WTISD) 2026ஆம் ஆண்டு கொண்டாடும் இவ்வேளையில், இலங்கை ஒரு திருப்புமுனையான சந்திப்பில் நிற்கிறது. 'கமட்ட சன்னிவேதனய' மற்றும் 'பாடசாலை வலையமைப்பு' திட்டங்கள் என்பவை வெறும் இரும்பு கட்டமைப்புகள், வன்பொருட்கள் அல்லது கேபிள்களை நிறுவுவது மட்டுமல்லாது அது ஒரு டிஜிட்டல் பொருளாதாரத்திற்கு தேவையான அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்யும் ஒரு முயற்சியாகும். மேலும் இது இலங்கையின் வலையமைப்பு மீள்திறனுக்கு ஒரு முக்கிய சான்றாக விளங்குகிறது. இது நமது டிஜிட்டல் உருமாற்றத்திற்கான தேசிய இலக்குடன் குடிமக்கள் அதிக அதிகமாக டிஜிட்டல் உலகத்திற்கு ஏற்றாற் போன்று மாறுவதற்கு தேவையான கருவியை வழங்கும். நிலையான வலையமைப்பு உலகிற்குள் எந்தவொரு கிராமமும் தனிமைப்படுத்தக்கூடாது. இத்திட்டங்களின் மூலம் இலங்கையின் ஒவ்வொரு பிரதேசமும் உலகளாவிய வலையமைப்பிற்குள் இணைக்கப்பட்டு, வலிமையான, பாதுகாப்பான மற்றும் அனைவருக்கும் அணுகக்கூடிய ஒரு டிஜிட்டல் இணைப்பை உருவாக்குவதை நாங்கள் உறுதி செய்கின்றோம்.